[1974 சனவரி 23

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 1972-ம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 35,000 டன் கோதுமை தமிழ் நாட்டிற்கு மத்திய அரசினரால் ஒதுக்கப்பட்டது.

(இ)

| | |
|---|---|
| சனவரி 1973 | 15,000 |
| பிப்ரவரி 1973 | 15,000 |
| மார்ச் 1973 | 15,000 |
| ஏப்ரல் 1973 | 15,000 |

*Distribution of wheat*

* 113 Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the basis on which the wheat allotted to Tamil Nadu by the Food Corporation of India is being distributed to the public ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஒரு குறிப்பிட்ட அளவு பொது மக்களுக்கு முழு கோதுமையாக வழங்கப்படுகிறது. எஞ்சிய கோதுமையை மைதா, ரவை, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற பொருட்களாக மாற்றப்படுகிறது. சில்லரை வியாபாரிகளுக்கும், பங்கீட்டு அட்டைகளின் பேரில் பொது மக்களுக்கும் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்தின் மூலம் கோதுமை வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரத்திலும், மாவட்டங்களிலும் வழங்கப்படும் கோதுமை அளவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கோதுமை

| | | |
|---|---|---|
| கோதுமை உண்பவர்கள் | .. | 6 கிலோ கிராம் கோதுமை. |
| நீரிழிவு நோயாளிகள் | .. | 5 கிலோ கிராம் கோதுமை. |

கோதுமைப் பொருட்கள்.

| | |
|---|---|
| (அ) திங்களொன்றுக்கு ரூ. 300-ம் அதற்கு குறைவாகவும் வருவாய் உடைய குடும்பங்கள். | மைதா 1 கிலோ கிராம் ரவை 1 கிலோ கிராம். |
| (இ) திங்களொன்றுக்கு ரூ. 300-ம் அதற்கு மேல் வருவாய் உடைய குடும்பங்கள். | மைதா 2 கிலோ கிராம் ரவை 2 கிலோ கிராம். |

1974 சனவரி 23]

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோதுமையை பழக்கமாகச் சாப்பிடக்கூடிய வர்கள் சென்னையிலே ஏராளமாக இருக்கிறார்கள், குறிப்பாக பார்க் டவுனிலே ஏராளமாக இருக்கிறார்கள். முழுமையாகக் கோதுமை தரவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு கோதுமையினால் தயாரிக்கப்படுகிற மைதாவும் மற்ற வையும் கொடுக்கப்படுகின்றன, கோதுமை சரியான அளவிற்கு அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி மத்திய அர சாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய அளவில் கோதுமை பழக்கமாக சாப்பிடக்கூடிய வர்களுக்கு முழுமையாகக் கோதுமை போதுமான அளவிற்குக் கொடுக்கச் செய்யக்கூடிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர் களே, கோதுமையை 35 ஆயிரம் டன்னிலிருந்து 10 ஆயிரம் டன் னுகக் குறைத்துக் கொடுப்பதை அதிகமாகக் கொடுக்க வேண்டு மென்று நாம் ஒவ்வொரு மாதமும் கேட்டுக்கொண்டிருக்கிறோம், எழுதிக்கொண்டிருக்கிறோம். கார்டு வைத்திருக்கக்கூடியவர் களுக்கு 6 கிலோ கொடுக்கப்படுகிறது. அது பற்றாது என்று சொல்கிறார்கள். மீண்டும் மீண்டும் நாம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், 10 ஆயிரம் டன்னிலிருந்து நாம் கோதுமையாகவே கொடுப்பது எவ்வளவு? மத்திய சர்க்காரி லிருந்து நம்முடைய கார்ப்பரேஷன் டன் ஒன்றுக்கு என்ன விலை கொடுத்து வாங்குகிறது? இங்கு என்ன விலைக்கு ஒரு கிலோ கொடுக்கப்படுகிறது என்ற தகவல்களை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அவர்கள் கொடுக்கிற பத்தாயிரம் டன்னில் சுமார் 9,000 டன்களை அரைக்கும் பொழுது 55 சதவிதம் மைதாவாகவும், 15 சதவிதம் ரவையாகவும், 8 சதவிதம் ஆட்டாவாகவும் கிட்டத்தட்ட 20 சதவிதம் தவிடாகவும் கிடைக்கின்றன. ரவை 1.30 என்ற விலையும், மைதா 1.30 என்ற விலையும், முழு ஆட்டா 1.00 விலையும், கப்பி ஆட்டா 1.00 என்ற விலையும், தவிடு 0.60 என்ற விலையும் வைத்து விற்கப்படு கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்பொழுது நாம் பார்க்கிறோம், சம்பா கோதுமை, சாதாரணக் கோதுமை என்றெல்லாம் கொடுக்க படுகிறது. அங்கேயிருந்து வருகின்ற கோதுமையில் நாம் கோதுமையாகவே எத்தனை சதவிதம், 5 சதவீதமா ? 10 சதவீதமா எத்தனை சதவிதம் கொடுக்கிறோம் ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஆயிரம் டன்னைத் தான் கோதுமையாகவே கொடுக்கிறோம். கோதுமை சாப்பிடக் கூடியவர்களுக்கு வெளிமாநிலங்களிலிருந்து வந்துகொண்டிருந்த கோதுமையை நிறுத்திவிட்டதால் தான் இந்த முடை ஏற்பட்டிருக்கிறது.

• **திரு. மா. வெ. கரிவேங்கடம் :** அமைச்சர் அவர்கள் விடையளிக்கின்ற போது வருமான அடிப்படையிலே கார்டுக்கு இத்தனை கிலோ என்று கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்திலே கடந்த நான்கு மாதங்களாக நகரத்திற்கு மாத்திரம்தான் கோதுமை கொடுக்கப்படுகிறது, மற்ற இடங்களிலே கொடுக்கப்படுவதில்லை, மாவட்டம் முழுவதும் கோதுமை, கோதுமையிலிருந்து தயாரிக்கப்படுகின்ற பொருட்கள் விநியோகம் ஆகவில்லையே என்ன காரணம் என்று கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அளவிற்குத்தான் நகரங்களிலேயும் மற்ற பகுதிகளிலேயும் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் இல்லாததால்தான் பற்றாக்குறை ஏற்படுகிறது, முழு அளவும் நமக்கு கொடுக்கப்பட்டால்தான் நாம் அதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, கோதுமை கோயம்புத்தூர் மாவட்டத்திலே உள்ள டையபிட்டிக் பேஷன்ட்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது, மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஸொஜ்ஜி என்ற ரவை அத்யாவசியமாக இருப்பதால் அதை அதிகமாக இறக்குமதி செய்து கொடுக்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ரவை என்று தனியாக நாம் இறக்குமதி செய்வது இல்லை. கோதுமையிலிருந்து நாமே ரவை தயாரிக்கிறோம். மைதா, ஆட்டா, ரவை தவிடு போன்றவைகளாக ஆக்கிக் கொடுக்கிறோம். அவர்கள் கொடுக்கிற

1974 சனவரி 23]

பத்தாயிரம் டன்னில் 9 ஆயிரம் டன்களில் இவற்றைக் கொடுக்கிறோம். எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்ற முறையிலேதான் அப்படிக் கொடுக்கப்படுகிறது. நமக்கு நிறைவாகக் கொடுத்தால்தான் எல்லோருக்கும் கொடுக்க முடியும், இல்லாவிட்டால் கொடுக்க முடியாது என்ற நிலைமைதான் இருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், கோதுமையைக் கொடுக்கின்ற போது ஆட்டாவாகவும் ஆக்கிக் கொடுக்கிறார்கள். கோதுமையை அரைத்து ரவையை அப்புறப்படுத்தி, மைதாவை அப்புறப்படுத்தி அதனுடைய 'ரெம்னன்ட்ஸ்' என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் அவை தவிடாகவும் உமியாகவும் இருக்கிறது. மக்கள் சாப்பிடக்கூடிய அளவிற்கு இருந்தால்தான் ஆட்டா கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் கோதுமையையே கொடுக்கவேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மைதா, ஆட்டா போதிய அளவு இல்லாத காரணத்தினாலேதான் 60 சதவிகிதத்தை மைதாவும், 40 சதவிகிதத்தை ஆட்டாவும் ஆக அவர்கள் விரும்பினால் வாங்கிக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். விரும்பினால்தான் வாங்கிக் கொள்ளலாம், இல்லாவிட்டால் வாங்கிக்கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை. முன்னாலே கொடுத்ததிலே 60 சதவிகிதம்தான் கொடுக்க முடியும் என்ற நிலைமைதான் இருக்கிறது.

**திருநெல்வேலி மாவட்டத்தில் லெவி சர்க்கரை வியாபாரிகள்**

***114 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் நியாய விலை சர்க்கரை விநியோகம் செய்ய நியமிக்கப்பட்டுள்ள சிறு வியாபாரிகள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் தனி நபர் எத்தனை பேர், கூட்டுறவு சங்கங்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 893.

(இ) 23—11—1973 நிலவரப்படி,

| | |
|---|---|
| தனி நபர்கள் | 384 |
| கூட்டுறவு பண்டகசாலைகள் | 505 |
| அரசு மாதிரிக் கடைகள் | 4 |